## முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.88/2023

அரசு தரப்பு சாட்சி 5 (LW4) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | பிரகாஷ் | வட்டம் | - | |
| த/பெ | - | ஜகனாதன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 09.10.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 1,3,4,6 முதல் 9 ஆஜர். எதிரி 11 ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி 10 ஆஜர் இல்லை. அவர் சார்பில் பிரிவு-317 கு.வி.மு.ச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. 2ம் எதிரி V.C. மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)

### முதல் விசாரணை

நான் தற்போது விழுப்புரத்தில் வசிக்கிறேன். நான் H.P.C.L. and ESSAR Petrol Bunk நடத்திவருகிறேன். ESSAR Petrol Bunk பாண்டி ரோடு கம்பன் நகரில் உள்ளது. அதன் உரிமம் எனது மனைவி நித்தியா பெயரில் உள்ளது. 04.02.2020 அன்று மேனேஜர் சீனிவாசன் மற்றும் கன்மேன்கள் பாலசுந்தரம், அமாவாசை, தரணி ஆகியோர் வேலையில் இருந்தனர். மேனேஜர் சீனிவாசன் உயிரோடு இல்லை. எனக்கு பெட்ரோல் பங்கிலிருந்து அன்று மேனேஜர் இறந்துவிட்டதாக போன் வந்தது. நான் பெட்ரோல் பங்கிற்கு சென்றபோது அங்கு கூட்டமாக இருந்தது. பெட்ரோல் பங்க் அலுவலக அறையில் சீனிவாசன் தலையில் வெட்டுபட்டு தரையில் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். நான் அலுவலக அறைக்கு உள்ளே செல்லவில்லை. ஆஜர் எதிரிகளில் எனக்கு யார் யாரை தெரியும் என்றால் எனக்கு அவர்களை தெரியாது. பெட்ரோல் பங்கில் வேறு ஏதாவது சம்பவம்

நடந்ததா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. என் வீட்டில் எதுவும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை, எனது பக்கத்துவீட்டல் சம்பவம் எதாவது நடந்ததா என்றால் எனக்கு தெரியாது. எனது கம்பெனியில் வேலை செய்யும் ஆட்களை என்னால் அடையாளம் காட்டமுடியும். என் பெட்ரோல் பங்கில் 8 சிசிடிவி கேமரா உள்ளது. பெட்ரோல் பங்க் அலுவலக அறையில் 1 சிசிடிவி கேமரா உள்ளது. போலிசார் இந்த சம்பவம் பற்றி என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை, மற்றவர்களை விசாரித்தார்கள். பிறகு என்னை போலிசார் விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் பெட்ரோல் பங்க் சிசிடிவி கேமாராவின் Hard Disc ஐ கொடுக்கும்படி போன் மூலம் கேட்டார்கள், நான் பெட்ரோல் பங்கில் வேலை செய்பவர்களிடம் அந்த Hard Disc ஐ போலிசாரிடம் கொடுக்கும்படி சொன்னேன். என் பெட்ரோல் பங்கில் வேலை செய்பவர்கள் அந்த Hard Disc ஐ போலிசாரிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்பதை பின்பு தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படுவது என் பெட்ரோல் பங்கில் விற்பனை செய்யப்பட்ட பெட்ரோல், டீசல் தரம் குறித்த Test Certificate நகல் ஆகும். அந்த சான்று எங்கள் பேட்ரோல் பங்க் அலுவலக கண்ணாடி தடுப்பில் ஒட்டப்பட்டிருந்தது. அதை போலிசார் கைப்பற்றி உள்ளார்கள். அந்த சான்றிதழை யாரிடமிருந்து போலிசார் கைப்பற்றினார்கள் என்று தெரியவில்லை. அந்த Test Certificate நகல் அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி சான்றுக்கும் சாட்சிக்கும் சம்மந்தமில்லை என்று எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது) என்னிடம் காட்டப்படும் மற்றொரு ஆவணம் VAT Certificate Registration நகல் ஆகும். அந்த ஆவணத்தில் ஒட்டப்பட்டுள்ள புகைப்படத்தில் உள்ள நபர் எனது மனைவி நித்தியா ஆகும். மேற்படி ஆவணமும் என்னுடைய அலுவலகத்தில் ஒட்டப்பட்டிருக்கும். அந்த ஆவணத்தை போலிசார் யாரிடமிருந்து கைப்பற்றினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அந்த ஆவணம் அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்படி சான்றுக்கும் சாட்சிக்கும் சம்மந்தமில்லை என்று எதிரிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது) இப்போது நான் கூறுவதை தான் போலிசார் விசாரித்தபோதும் கூறினேன்.

(மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அரசுத்தரப்பில் அனுமதி வேண்டப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது. )

அரசுதரப்பில் குறுக்குவிசாரணை:

நான் பெட்ரோல் பங்க் நடத்தும் போது யாராவது வந்து என்னிடம் மாமூல் கேட்டார்களா என்றால் இல்லை. நான் மாமூல் கொடுத்தேனா என்றால் இல்லை. மாமூல் கொடுக்கவில்லை என்றால் என்னை கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்களா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. என்னை மாமூல் கேட்டு மிரட்டுகிறார்கள் என்று போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. வீடியோ காலில் ஒரு நபர் என்னிடம் பேசி என்னை தெரியவில்லையா என்று மிரட்டினாரா என்றால் ஞாபகம் இல்லை. அந்த நபர், நான் தான் இருசப்பன் கூட்டாளி, என்னை தெரியவில்லையா என்று என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. இந்த சம்பவம் 09.03.2018 அன்று நடந்து என்னிடம் மாமூலம் கேட்ட நபர்களான சூர்யபிரகாஷ், வெங்கடேசன் இவர்கள் பெயரில் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு போட்டார்கள் என்றால் ஆமாம், அது குறித்து நான் நீதிமன்றத்தில் அந்த வழக்கில் சாட்சியம் அளித்தேன் என்றால் ஆமாம். என் வீட்டிற்கு பக்கத்தில் பொற்செழியன் வீடு உள்ளதா என்றால் என் வீட்டிலிருந்து 3 வீடுகள் தள்ளி அவர் வீடு உள்ளது. என் வீடு என்று நினைத்து பொற்செழியன் வீட்டை ஆரோக்கியராஜ், விமல் ஆகியோர் மண்ணெண்ணை நிரப்பிய பாட்டிலை வீசி 09.03.2018 அன்று வெடிக்க செய்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் அதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சம்பவம் சம்மந்தமாக சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டு சம்பவத்தில்

ஈடுபட்ட நபர்கள் மீது போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. இதன் தொடர்ச்சியாக தான் 04.02.2020 காலை 9.30 மணிக்கு ESSAR Petrol Bunk கு கணக்கு வழக்கு பார்க்க சென்றேனா என்றால் ஆமாம். அப்போது மேனேஜர் சீனிவாசன் மற்றும் கன்மேன்கள் பாலசுந்தரம், அமாவாசை, தரணி ஆகியோர் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் 10.00 மணிக்கு பங்கிலிருந்து புறப்பட்டு சென்றபிறகு 11.30 மணிக்கு பாலசுந்தரம் என்னுடைய கைப்பேசியில் மேனேஜர் மீது நாட்டுவெடிகுண்டு வீசி பட்டாகத்தியால் வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னாரா என்றால் இல்லை, மேனேஜர் இறந்துவிட்டார் என்று தான் எனக்கு போன் வந்தது, யார் போன் செய்தார்கள் என்று ஞாபகம் இல்லை. நான் தகவல் கிடைத்து பெட்ரோல் பங்கிற்கு சென்று பார்த்தபோது அலுவலகத்தில் வெடிகுண்டு வீசி பொருட்கள் சிதறி கிடந்ததும் மேனேஜர் சீனிவாசன் தலையில் கத்தியால் வெட்டுபட்டு மூளை சிதறி தரையில் கிடந்ததையும், வெடிக்காத நாட்டு வெடிகுண்டுகள் 2 தரையில் கிடந்ததையும் பார்த்தேனா என்றால் இல்லை, நான் அலுவலகத்திற்கு வெளியே நின்று மேனேஜர் சீனிவாசன் ரத்த வெள்ளத்தில் உள்ளே கிடந்ததை பார்த்துவிட்டு வெளியே வந்துவிட்டேன். என் அலுவலகத்தின் கதவிற்கு மேற்குபுறம் இருந்த பார்வை கண்ணாடி மீது பட்டு அந்த கண்ணாடிகளில் விரிசல் ஏற்பட்டு ரூ.28,000/- சேதம் அடைந்துவிட்டதாக போலிசாரிடம் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. என் பெட்ரோல் பங்க் அலுவலக கண்ணாடி சேதம் அடைந்ததாவது எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு அம்னீசியா என்றால் ஞாபகமறதி நோய் என்பது தெரியுமா என்றால் தெரியும். எனக்கு அந்த வியாதி உள்ளதா என்றால் இல்லை. போலிசாரிடம், அசார் கேட்ட பணத்தை கொடுக்காததால் என் மீது விரோதம் கொண்டு என்னை கொலை செய்வதாக நினைத்துக்கொண்டு சீனிவாசன் மீது நாட்டு வெடிகுண்டு வீசி கொலை செய்துவிட்டு காரில் தப்பி ஓடிவிட்டதாக நான் சொன்னேனா என்றால் இல்லை. எதிரிகள் என் மீது

ஏற்கனவே கொலைமிரட்டல்கள் விடுத்து என்னை கொல்வதாக நினைத்து எனது மேனேஜர் சீனிவாசனை கொன்றதால் எதிரிகளுக்கு பயந்துகொண்டு நான் உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(போலிசார் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சிடி(குறுந்தகடு) வீடியோவை நீதிமன்றத்தில் ஓட்டி காண்பிக்கும்படி அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனையுடன் அந்த சிடி நீதிமன்ற கணிணியில் Assistant Programer Tr.A.Arunselvam அவர்கள் உதவியுடன் திரையிடப்பட்டது. மேற்படி சிடியில் 3 பகுதிகளாக காட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளது)

அந்த வீடியோ பதிவில் உள்ள அறை என் பெட்ரோல் பங்க் மேலாளர் அலுவலக அறையா என்றால் அந்த அறை எங்கள் அலுவலக அறை மாதிரி தெரியவில்லை. அதில் குண்டு வீசும் நபரையும் அறை வாசலில் எட்டிபார்க்கும் நபரையும் என்னால் அடையாளம் காட்டமுடியுமா என்றால் அவர்களை அடையாளம் தெரியவில்லை. 2வது வீடியோ பதிவில் உள்ள இடம் என் பெட்ரோல் பங்க் இடமா என்றால் ஆமாம். அந்த வீடியோவில் உள்ள காம்பவுண்ட் சுவர் எனது பெட்ரோல் பங்க் சுவர். 3வது வீடியோ பதிவில் காணப்படும் நீல சட்டை தோளில் கலெக்சன் பேக் அணிந்த நபர் என் பெட்ரோல் பங்க் ஊழியரா என்றால் ஆமாம். அவர் பாலசுந்தரமா என்றால் அவர் முகம் எனக்கு அடையாளம் தெரியவில்லை.

எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்குவிசாரணை

ஏற்கனவே நான் சாட்சி சொன்ன வழக்கில் நீதிமன்றத்தில் அந்த வழக்கு எதிரிகளை தெரியாது என்றும் யாரும் என்னை மிரட்டவில்லை என்றும் சாட்சி சொன்னேன் என்றால் ஆமாம்.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.

## முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், அமர்வு வழக்கு எண்.88/2023

அரசு தரப்பு சாட்சி 6 (LW5) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | மீரா | வட்டம் | - | |
| க/பெ | - | சீனிவாசன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 09.10.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 1,3,4,6 முதல் 9 ஆஜர். எதிரி 11 ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி 10 ஆஜர் இல்லை. அவர் சார்பில் பிரிவு-317 கு.வி.மு.ச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. 2ம் எதிரி V.C. மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)

### முதல் விசாரணை

நான் தற்போது விழுப்புரத்தில் வசிக்கிறேன். எனது கணவர் மீது வெடிகுண்டு வீசியதால் அவர் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் கருநீல பேன்ட் 1, சிறுகட்டம் போட்ட அரைக்கை சட்டை Otto என்று எழுதப்பட்டுள்ளது, காபி நிற ஜட்டி ராம்ராஜ் என்று பெயர் உள்ளது, வெள்ளை நிற முண்டா பனியன் என் கணவருடையது தான். அவை முறையே சான்றுபொருட்கள் 1 முதல் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.

# முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.88/2023

அரசு தரப்பு சாட்சி 7 (LW8) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | பாரதிராஜா | வட்டம் | - | |
| த/பெ | - | ஆறுமுகம் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 09.10.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 1,3,4,6 முதல் 9 ஆஜர். எதிரி 11 ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி 10 ஆஜர் இல்லை. அவர் சார்பில் பிரிவு-317 கு.வி.மு.ச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. 2ம் எதிரி V.C. மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)

### முதல் விசாரணை

நான் தற்போது நேமூரில் வசிக்கிறேன். நேமூர் பங்கில் வேலை செய்கிறேன். அசா.5 பிரகாஷ் பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன். மேனேஜர் சீனிவாசன் இறந்த பிறகு விழுப்புரம் ESSAR Petrol Bunk கு சென்றேன். அங்கு சிசிடிவி இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. என்னை போலிசார் விசாரித்தார்கள். என்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி பிரிவு 65(பி) இந்திய சாட்சிய சட்டம் படியான சான்றிதழில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வேறு எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை.

(மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அரசுத்தரப்பில் அனுமதி வேண்டப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது. )

அரசு தரப்பில் குறுக்குவிசாரணை:

என் முதலாளி பிரகாஷ் என்னிடம் சிசிடிவி கேமரா Hard Disc ஐ கொடுத்து கம்யூட்டர் சென்டருக்கு சென்று 04.02.2020 அன்று பதிவான காட்சிகளை சிடி யாக மாற்றிவருமாறு கூறினார் என்றாலும் நான் அதை கம்யூட்டர் சென்டருக்கு சென்று சிடியில் பதிவு செய்து காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.

# முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.88/2023

அரசு தரப்பு சாட்சி 8 (LW15) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | குணசேகர் | வட்டம் | - | |
| த/பெ | - | ஏழுமலை | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 09.10.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 1,3,4,6 முதல் 9 ஆஜர். எதிரி 11 ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி 10 ஆஜர் இல்லை. அவர் சார்பில் பிரிவு-317 கு.வி.மு.ச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. 2ம் எதிரி V.C. மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்)

## முதல் விசாரணை

நான் தற்போது பிரம்மதேசத்தில் வசிக்கிறேன். விழுப்புரத்தில் உள்ள ESSAR Petrol Bunk எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலில் உள்ள கையொப்பம் என்னுடையது, 2வது சாட்சி நாகலிங்கத்துடையது. போலிசார் கேட்டதால் கையொப்பம் போட்டேன். அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. பர்வை மகசரில் உள்ள என் கையொப்பம் மட்டும் அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.02.2020 14.15 மணிக்கு எழுதப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மற்றொரு கையொப்பம் நாகலிங்கத்துடையது. அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள என் கையொப்பம் மட்டும் அதசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதி நேரத்தில் உள்ள மற்றொரு கைப்பற்றுதல் மகாசில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான். மற்றொரு கையொப்பம் நாகலிங்கத்துடையது. அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள என் கையொப்பம் மட்டும் அதசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே தேதியில் 14.45 மணிக்கு தயாரித்த மற்றொரு கைப்பற்றுதல் மகாசில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மற்றொரு கையொப்பம் நாகலிங்கத்துடையது. அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள என் கையொப்பம் மட்டும் அதசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அரசுத்தரப்பில் அனுமதி வேண்டப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது. )

அரசு தரப்பில் குறுக்குவிசாரணை

04.02.2020 அன்று பகல் 1.15 மணிக்கு ESSAR Petrol Bunk னை காவல் ஆய்வாளர் என் முன்னிலையிலும் நாகலிங்கம் முன்னிலையிலும் பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும் நாகலிங்கமும் நேரிலிருந்து பார்த்து கையொப்பம் போட்டுவிட்டு தற்சமயம் அதில் என்ன உள்ளது என்று தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

04.02.2020 அன்று பகல் 14.15 மணிக்கும் 14.30 மற்றும் 14.45 மணிக்கும் 3 மகசர்களும் என் முன்னிலையிலும் நாகலிங்கம் முன்னிலையிலும் அதில்

கூறப்பட்டுள்ள பொருட்கள் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதை எழுதிய மகசரில் நாங்கள் கையொப்பம் இட்டுவிட்டு தற்சமயம் அதில் என்ன உள்ளது என்று தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.